**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 51/2022 (C/W OS. 268/2022)**

பெயர் : மணிவாசகம் (PW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :22.04.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ. 1 ன் அசல் ஆவணம் லாக்கரில் உள்ளது அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அசல் ஆவணம் என்னிடம் இல்லாததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ல் சர்வே எண். 591/ஏ 18 என்று உள்ளது. பிராதில் சர்வே எண் 591/ஏ 18 என்று சொல்லவில்லை. மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவின் படி ரி-சர்வே புதிய சர்வே எண் 460/18 என்று குறிபிட்டுள்ளது. வா.சா.ஆ. 1 ல் நான்கெல்லையாக மெயின் ரோட்டிற்கு தெற்கு, செங்கழுநீர் ஓடைக்கு வடக்கு, நகர விடுதி சந்துக்கு கிழக்கு, ராமக்கிருஷ்ணன் கொல்லைக்கு மேற்கு என்றுள்ளது. அதில் விஸ்தீரணம் சரியாக படிக்க இயலவில்லை. 13277 சதுரடி தோராயமாக இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதி செட்டில் மெண்ட்டில் உள்ள நான்கெல்லையை OS. 51/2022 வழக்கில் சொத்து விபரத்தை குறிப்பிட்டுள்ளேன். சொத்திற்கு தெற்கே ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தென்னந்தோப்பு மற்றும் குளம் உள்ளது என்றால் அது குளம் அல்ல செங்கழுநீர் ஓடை. அவ்வாறு ஓடை இல்லை குளம் மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. பத்திரத்தை தவிர அதற்கு நில அளவியற் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செட்டில் மெண்ட் சொத்தின் கதவிலக்கம் 18,18 ஏ என்றால் சரிதான். விஸ்தீரணம் 1070 சதுர மீட்டருக்கு சமமான 11,518 சதுரடி என்றால் சரிதான். வாச.சா.ஆ. 1 ல் 13277 சதுரடி உள்ளது என்றாலும் செட்டில் மெண்ட் ஆவணத்தில் 11518 என்றுள்ளது என்றாலும் மீதி இடத்தை சாலைக்காக ஆர்ஜிதம் செய்துவிட்டார். நிலம் ஆர்ஜிதம் செய்ததற்கு ஆவணம் போடவில்லை. தாவா சொத்திற்கும் வா.சா.ஆ. 1 க்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. 2018 க்கு முன்பு தாவா சொத்திற்கான என் குடும்பத்தார் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்தது. சொக்கலிங்க செட்டியார் மற்றும் தேனப்ப செட்டியார் பெயரில இருந்தது. அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு ஆ படிவேடு பட்டா இல்லாததால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொக்கலிங்க செட்டியார் மற்றும்

தேனப்பசெட்டியார் அனுபவத்தில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பேருராட்சி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். கதவிலக்கம் 18 க்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 25 ஆவணத்தில் கதவிலக்கம் எண். 20 என்றுள்ளது என்றால் மாறி இருக்கலாம். வா.சா.ஆ. 25 தாவா சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. என் பிராதில் கதவிலக்கம் 20 என்று நான் குறிப்பிடவில்லை. தாவா சொத்திற்காக பட்டா முகாம்பிகை பெயரில் இருந்ததா என்றால் இருந்தது. முகாம்பிகையை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. வா.சா.ஆ. 24 முதல் 26 ஆவணம் வீட்டு வரி ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்பந்தமானது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா முகாம்பிகை பெயரில் இருந்தது என்பது வா.சா.ஆ. 2 ன் படி 2014 ல் லேயே எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 என் சித்தப்பா முத்தையா பெயரில் கடிதம் வந்துள்ளது என்றாலும் அவரும் வழக்கில் தரப்பினர் என்றாலும் சரிதான். 2014 ல்லேயே தாவா சொத்திற்கான பட்டா எங்கள் பெயரில் இல்லை என்பது எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். 27.04.2013 ல் தாவா சொத்திற்கான பட்டாவை சுப்பிரமணியன் பெயரில் இருந்து வைத்தியநாதன் பெயரில் மாற்றி உள்ளார்கள் என்றால் செட்டில் மெண்ட் அடிப்படையில் மாற்றி உள்ளார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தரான் பட்டா மாறுதல் உத்தரவு என்றால் சரிதான். **அது. பி.வா.சா.ஆ 1 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. 2ம்பிரதிவாதி முதல் பிரதிவாதிகக் எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் தான் என்னிடம் காண்பிக்பகப்படும் ஆவணம் அது **பி.வா.சா.ஆ 2 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. பி. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் முகாம்பிகை பெயரில் இருந்து சுப்பிரமணியன் பெயரில் பட்டா மாறுதல் செய்ப்பட்ட 07.11.2004 உத்தரவு இணைக்கபட்டுள்ளது என்றால் சரிதான். கதவிலக்கம் 18 ஏ 2ம்பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ. 23 வில்லங்ச்சான்று சொத்துவிபரம் செட்டில் மெண்டில் உள்ள சொத்து விபத்தை குறிப்பிட்டு வாங்கப்பட்டது. 09.03.2018 ல் வில்லங்கத்திற்கு மனு கொடுத்தோம். செட்டில் மெண்ட் விபரம் எங்களுக்கு தெரியும் என்றால் கிராம நிர்வாக அலுவலர் விபரம் கொடுத்தார். செட்டில் மெண்ட் சொத்து விபரத்தை பார்த்து தான் வில்லங்த்திற்கு மனு செய்தோம் என்றால்சரியல்ல. எடக்குடி வடபாதி கிராம நிர்வாக அலுவலர் தான் 2018 ல் விபரம் சொன்னார். தேதி மாதம் நினைவில்லை. 460/10 சர்வே எண்

குறித்தவிபரம் தான் நாங்கள் VAO விடம் கேட்டோம். VAO மூலமாக தான் சர்வே தெரிந்துக் கொண்டோம். அவர் கொடுத்த விபரத்தில் செங்கழுநீர் ஓடை இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் தாவா சொத்திற்கு தெற்கில் செங்கழுநீர் ஓடை இல்லை என்றால் சரியல்ல. அதை ஓடை அல்லது குட்டை என்றுசொல்வார்கள் குளம் என்று சொல்வதில்லை. வா.சா.ஆ. 23 ஆவணம் செட்டில் மெண்ட் இருப்பதை அறிந்து அந்த ஆவணத்தின் அடிப்படையில் வில்லங்கச்சான்று பெற்றுள்ளோம் என்றாலும் செட்டில் மெண்ட் விபரம் முன்பே தெரியும் என்றால் சரியல்ல. 2018 ல் தான் தெரியும். வா.சா.ஆ. 3 ஆவண உத்தரவிற்கு முன்பாக முகாம்பிகைக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் 1, 2 பிரரிவாரிகள் மட்டும் விசாரணைக்கு வந்திருந்தார்கள். முகாம்பிக்கைக்கு அனுப்பவில்லை. சொக்கலிங்கம், தேனப்பன் பெயரில் பட்டா மாற்றம் செய்து 2018 ல் உத்தரவு போடப்பட்டது. அதற்கான மனு நான் தான் போட்டேன். நான் மனு போட்ட போது சொக்கலிங்கம், தேனப்பன் உயிருடன் இல்லை. வா.சா.ஆ. 3 காலத்தில் அவர்கள் உயிருடன் இல்லைஎன்றால் சரிதான். இறந்தவர்கள் பெயரில் பிறப்பிக்கப்படும் உத்தரவு செல்லுமா என்றால் அது குறித்து தெயவில்லை. இறந்தவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்தஉத்தரவு செல்லாதுஎன்றால்சரியல்ல. வா.சா.ஆ. 3 உத்தரவு செல்லாத போது அதன் அடிப்படையில் தாக்கல் செய்த வா.சா.ஆ. 5, 6 பட்டாசெல்லக்கூடியது அல்ல என்றால்சரியல்ல. வா.சா.ஆ. 3 க்கு எதிராக வைத்தியநாதன், DRO விடம்விண்ணப்பித்துள்ளார் என்றால் அதுவும் கேன்சலாகி விட்டது அந்த உத்தரவை தாக்கல் செய்யவில்லை. விசரணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு உரிமை என்று விளம்புகை பரிகாரம் கேட்டுளோம். செட்டில் மெண்ட் ஆவண்ம செல்லாது என்று புதி ய சட்டபிரிவின் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதால் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமை கேட்டால்ததன் பட்டா மாறுதல் குறித்து பரிகாரம் கேட்க இயலும் என்றால் சரியல்ல. வாதிகள் அனைவரும் மயிலாதுறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்ச்சியாக யார் அனுபவத்தில் இருந்தது என்றால்நாங்கள் குல தெய்வம் கோவிலுக்கு வரும் போது வாங்கப்பட்ட சொத்து வாதிகள் யார் வருவார்கலோ அவர்கள் தங்குவாதர்கள். தாவாசொத்து வாதிகள்

அனுபவத்தில் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்திற்கும் தாவா சொதத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும்அது சொத்தின் உரிமைக்கான ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1ன் சொத்து விபரம் தாவா சொத்து விபரம் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. தாவா சொத்து முதல் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நாங்கள் போட்ட வழக்கை தள்ளுபடி செய்வேண்டும் பிரதிவாதிகளின் வழக்கு அனுமதிக்ககூடியது என்றால் சரியல்ல.